சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. G.கிருஷ்ணன், B.A., L.L.B.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண். 154/2022

வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. S. ஷர்மிளா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திரு. பழனியப்பன் | த/பெ: ருத்திராபதி | |
| | | க/பெ : | |
| வயது: | | ஊர் : | |
| தொழில்: | | அலைபேசி எண்: | |
| தேதி: | 04.09.2024 | முகவரி: | |

1 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...

கொரடாச்சேரி, வெண்ணவாசல் பகுதியில் நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் கொரடாச்சேரியில் உள்ள தனியார் பள்ளியில் தாளாளராக பணிபுரிந்து வருகிறேன். அது போக விவசாயம் செய்து வருகிறேன். அந்த பள்ளியின் பெயர் என்னவென்றால் ஸ்ரீமதி குஞ்சம்மாள் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி. அதன் உரிமையாளர் நான்தான். 1 ஆம் பிரதிவாதி நாகலெட்சுமிக்கு சொந்தமான திருமண மண்டபத்தில் நான் சிறிதுகாலம் நான் வாடகைக்கு எனது பள்ளியை நடத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த

இடத்தில் நான் எந்த பள்ளியும் நடத்தவில்லை. நான் அந்த இடத்தில் பள்ளிக்கூடம் நடத்தினேனா என்ற விவரம் அந்த தெருவில் உள்ளவர்களை விசாரித்தால் தெரிந்துவிடும் என்று சொன்னால் விசாரிக்கலாம். நான் அந்த இடத்தில் ரூ.3,00,000/-ஐ முன்பணமாக கொடுத்து வாடகைக்கு பள்ளிக்கூடம் நடத்திவந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி நாகலெட்சுமிக்கு தமிழில் எழுதப்படிக்கவே தெரியாது என்று சொன்னால் சரிதான், அவருக்கு எழுதப்படிக்க தெரியாது. 1 ஆம் பிரதிவாதியின் இடத்தில் நான் பள்ளிக்கூடம் நடத்திய சமயத்தில் அவர் வெளிநாட்டில் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் அவரது இடத்திலேயே பள்ளிக்கூடம் நடத்தவில்லை, அதனால் அவர் எப்போது வெளிநாட்டுக்கு போவார், வருவார் என்றெல்லாம் எனக்கு தெரியாது. நான் தாவா வழக்குரையில் முதலாவது பத்தியில் நீடாமங்கலம் தாலுக்கா, மாங்குடி வருவாய் கிராம புஞ்சை புல எண்.92/5 என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆன ஆவணத்திலும் மேற்படி புல எண்ணை குறிப்பிட்டு எழுதிக்கொடுத்ததாகதான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் மேற்படி சொத்தினை தீர்ப்புக்கு முன்னர் பற்றுகை செய்யவேண்டி இடைநிலை மனு எண்.1/2022 ஐ தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதில் சொல்லியுள்ள சொத்து விவரத்தில் புல எண்கள். 80/2 ஏ, 2 பி எனக்குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு வழக்குரையில் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்பட்ட புல எண்.92/5 என நான் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் வழக்கிடை மனு எண் மூலம் தீர்ப்புக்கு முன்னர் பற்றுகை செய்ய கோரிய சொத்துக்களை பொறுத்து எனக்கும் 1 ஆம் பிரதிவாதிக்கும் எந்தவித ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்று சொன்னால் புல எண்.92/5

உள்ள இடத்தை விற்பனை செய்துவிட்டு எனக்கு தரவேண்டிய பணம் ரூ.3,00,000/- ஐ திரும்ப செலுத்துவதாக சொல்லியிருந்தார். அந்த இடத்தை அவர் விற்பனை செய்தது 2022 என எனக்கு தெரியவந்தது. அதனால் நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் எனக்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தாமல் ஏமாற்றி விட்டதாக புகார் கொடுத்தேன். அதன் பின்னிட்டுதான் நான் மாற்று சொத்தை ஜப்தி செய்யவேண்டி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தேன். 1 ஆம் பிரதிவாதிக்கும் எனக்கும் கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக அந்த ஊரில் ஏதாவது பஞ்சாயத்து நடைப்பெற்றதா என்றால் இல்லை. காவல்நிலையத்தில் தான் நடைப்பெற்றது. எங்கள் ஊரில் பஞ்சாயத்து நடைப்பெற்று அதன்படி எழுதப்பட்ட ஆவணத்தில் இந்த வழக்கின் மூன்றாம் பிரதிவாதியும், 1 ஆம் பிரதிவாதியும் கல்யாண மண்டபத்தில் காவலர்களாக வேலை பார்த்த இரண்டு நபர்களும் சாட்சிகளாக கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அது போன்ற பஞ்சாயத்து எதுவும் நடைபெறவில்லை. கொரடாச்சேரியில் வைத்து முன்னாள் தி.மு.க. மாவட்ட செயலாளர் மறைந்த செல்வம் அவர்கள் முன்னிலையில்தான் இந்த பஞ்சாயத்து நடைப்பெற்றது என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** வரும் 11.09.2024 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
DN: cn=G KRISHNAN, c=+91
Date: 2024.09.04 17:40:11 +0530